# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் ௨௫ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௰<br>ஐப்பசி<br>1949—அக்டோபர் | மலர் ௭ |

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

## கலைமகள் விழா—1949

தமிழ்ப் பொழில் புரட்டாசி மலரில் வெளி வந்துள்ள அழைப்பிற் கண்டபடி, எதிர்பாராது நேர்ந்த சிறு மாறுதல்களுடன், இவ் வாண்டுக் கலைமகள் விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது.

பல நாள் இதழ்களில் குறிப்பிட்டுள்ளபடிக், கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஒரு பெருந் திருவிழா நகராகவும் சங்கத்துத் தமிழ்ப்பெருமன்றம் தோற்றம் மிக்க ஒரு கொலு மண்டபமாகவும் விளங்கின.

தமிழ் நாட்டுப் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல தலைவர்களும், புலவர்களும், மாணவ, மாணவிகளும், ஏனைய ஆண் பெண் ஆகிய இரு பாலாரும் தமிழ்ப்பெரு மன்றத்திலும், சங்கத்து வெளியிடங்களிலும் நிரம்பக் குழுமி யிருந்தனர். அறிஞர் சொற்பொழிவுகளைச் செவி மடுத்து எல்லோரும் மகிழ வேண்டி அங்கங்கே ஒலி பெருக்கிகள் வைக்கப்பெற்றிருந்தன.

இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, பத்தாம் நாள் விழாத் தலைவர்கள் எதிர்பாராத பொருட்டுக்களால் வர முடியாமையால், திருவாளர்கள் இராவ் சாகிபு ஐ. குமரசாமி பிள்ளை, B. A., அவர்களும், திருவையாறு திரு. A. சக்கர வர்த்தி முதலியார், B. A., அவர்களும், திருவையாறு அரசர் கல்லூரித்தலைவர் திரு. பெ. திருஞானசம்பந்தம், M.A., அவர்

களும், கரந்தைக் கவியரசு திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்களும், கும்பகோணம் வணிகர் திரு. K. A. M. சண்முக வேல் பிள்ளை அவர்களும், தஞ்சைத் துணை நடுவர், திரு. S. நடராச நாடார், B. A., B. L., அவர்களும் முறையே தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். அரிய சிறந்த சொற்பொழிவு களும், பள்ளிப் பிள்ளைகளின் பரிசுப் போட்டிகளும், நடிப் புத் திறனும், நாட்டிய அழகும், நிலையிருப்பு (ஆசனங்கள்) நலனும் யாவரும் மெச்சி மகிழும் தரத்தனவாய் இருந்தன. முதனாள் விழாவில் தலைமை தாங்கி விழாவைத் தொடங்கி வைத்த தஞ்சை மாவட்டத் தண்டத் தலைவர் திருவாளர் T. K. சங்கரவடிவேற் பிள்ளை அவர்களது முன் னுரைச் சொற்பொழிவின் சுருக்கமும், ஒன்பதாம் நாள் விழாவில் நம் அருமைத் தமிழ் மொழி ஆக்கங் குறித்து நிறைவேறிய முடிபுகளும் இவ் விதழில் வெளிவந்திருக் கின்றன. ஏனைய சொற்பொழிவுகளின் சுருக்கமும் பின்னர் வெளிவரும்.

இரண்டு நாள் தமக்காகத் திருவிடைமருதூர்க் கட் டளைத் தம்பிரான் சுவாமிகளையும் ஏனைய அன்பர்களையும் அனுப்பி விழாவைச் சிறப்பிக்கச் செய்த திருவாவடுதுறை அருட்டிரு. மகா சந்நிதானம் அவர்கட்கு நம் வணக்கமும், சங்கத்தின் நன்றியும் சிறப்பாக உரித்தாகும்.

இவ் விழாவை இத்துணைச் சிறப்பாக நடத்துவதற்கு உதவியாக இருந்த தலைவர்கட்கும், சொற்பொழிவாளர் கட்கும், மாணவ, மாணவிகட்கும், பொருளுதவிய தமிழ்ப் பெருமக்களுக்கும் சங்கத்தின் நன்றி உரியவாகும்.

இவ் வாண்டுக் கலைமகள் விழாவை மிகச்சிறப்பாகவும், திறமையாகவும் நடத்திய, உமாமகேசுவர நடுத்தரப் பள்ளித் தலைமையாசிரியர்; திரு. சோ. திருநாவுக்கரசுப் பிள்ளை அவர்கட்கும், ஏனைய ஆசிரியர்கட்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகும்.

விழாவுக்குப் பொருளுதவி செய்த அன்பர்கள் விவரம் அடுத்த இதழில் வெளிவரும்.

---

# "சென்னை நகரம் தமிழருக்கே"

மேற்கண்ட தலைப்பின் கீழ்ச் செந்தமிழ்ச்செல்வி புரட்டாசிப் (1949, அக்டோபர்) பரலில் எழுதப்பெற்றுள்ள குறிப்புக்களை அப்படியே நம் பொழிலன்பர் படித்து மகிழ்ந்து ஆவன செய்யும் பொருட்டு இங்கு வெளியிடுகின்றேம். செந்தமிழ்ச்செல்வியின் கருத்து நமக்கும் முற்றும் பொருத்தமானதே. நம் சங்கத்துக் கலைமகள் விழாவில் நிறைவேறிய முடிபுகளும் செந்தமிழ்ச்செல்வியின் கருத்தை முற்றும் ஆதரிக்கின்றன. தமிழ் மக்களாவார் எல்லோரும் மனந் தளராது ஊக்கமும் ஆர்வமுங்கொண்டு தமிழ்நாட்டெல்லையை வடவேங்கடம், தென்குமரி, கிழக்கு – மேற்குக் கடல்களாக நிலைநாட்ட முன்வந்து உழைக்க வேண்டுமென்று அறைகூவுகின்றேம்.

"சென்னை மாகாணத்தைத் துண்டாட வேண்டுமென்றுஆந்திரர் சில ஆண்டுகளாக முறையல்லா முறையில் முனைந்து நிற்கின்றனர். பிரகாசம் மந்திரி சபை ஒழிந்த பின்னரே, வீண்காழ்ப்புக் கொண்ட ஆந்திரர் மாகாணப் பிரிவினை முயற்சியில் மிகுதியாக ஈடுபடலாயினர். சென்னை நகரத்தையும் ஆந்திர மாகாணத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டுமென்பது அவர்களின் பேராவா. நகரில் வாழும் மக்களில் ஏறக்குறைய நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் தமிழர்களாக இருந்தும், சென்னை நகரைத் தமிழருக்கு விட்டுக் கொடுக்கவேண்டு மென்ற நல்லெண்ணம் அவர்கட்குத் தோன்றவில்லை,

"மொழிவாரி மாகாணப் பிரிவினை அமைப்பின் பொருட்டுக் கடந்த ஆண்டு ஜெயப்பூரில் கூடிய அனைத்து இந்திய காங்கிரஸ்குழுவினர் மூவர்குழு ஒன்றை நிறுவினர். அக்குழுவில், இந்திய முதலமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேருவும், துணை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேலும், அனைத்து இந்திய காங்கிரஸ் குழுவின் தலைவர் பட்டாபி சீதாராமய்யாவும் உறுப்பினராவர். இவர்கள் ஆய்ந்து பார்த்துச் சென்னை நகரம் தமிழருக்கே உரியது முறைமை

யாம் என்று ஒரு முகமாக முடிவு செய்தனர். ஆந்திரர் இம் முடிவை ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்.

"ஆந்திரரின் வீண் முயற்சிகள் நாளுக்குநாள் மிகுதிப் பட்டுவரவே, தமிழருக்குந் தம் தாய்நாட்டுப் பாதுகாப்புக்கு வழி தேடவேண்டிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு விட்டது. எனவே, தமிழ்நாடு பாதுகாப்புக் குழுவொன்றும் தோன்றியுள்ளது. தமிழர் நல்வாழ்வு வாழவேண்டுமானால், அவர்களின் நிலப்பகுதி பிறரால் கவரப்படாமலிருக்க ஆவன செய்யவேண்டியது இன்றியமையாததாகும். தமிழ்நாடு பாதுகாப்புக் குழுவில், உண்மை உணர்ச்சி மிக்க தமிழர் யாவரும் உறுப்பினராகித் தாய் நாட்டைப் பாது காக்கவேண்டியது நம்மவரின் தலையாய கடமை.

"தமிழ்நாடு பாதுகாப்புக் குழு தோன்றிய பின்னர், ஆந்திரர் இடியோசை கேட்ட நாகங்கள் போல் அலமருவா ராயினர். மேலும், இம்மாதம் 5-ம் நாள், அனைத்து இந்திய காங்கிரஸ் காரியக் குழுவினர், புது டில்லியில் கூடி, மொழி வாரி மாகாணப் பிரிவினையை யொட்டி, நேரு, பட்டேல், பட்டாபி விண்ணப்பித்த அறிக்கையை யேற்று, ஆய்ந்து பார்த்து, "சென்னை நகரம் தமிழருக்கே உரியது" என்று வெளிப் படையாகக் கூறிய பின்னர், ஆந்திரர் தம் எண்ணமெல் லாம் மண்ணாகிவிட்டது கண்டு வாளாயுள்ளனர். இனியும் சென்னையை உரிமை கொண்டாட அவர்கள் முனைந்து நிற் பார்களானால், தமிழர் குழாம் குருதி சிந்தியேனும் தம் தாய் நாட்டு எல்லைப்பகுதியைப் பாதுகாக்க முன்வரக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

"மேலும், சென்னை நகராண்மைக் கழகக் குழுவினர் இம்மாதம் 7-ம் நாள் சென்னை தமிழ் நாட்டையே சேர்ந்த தென்ற தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர். செங் கற்பட்டு மாவட்டக் கழக அங்கத்தினரும், இத்தீர்மானத் தை நிறைவேற்ற முயற்சிக்கின்றனர் என்பதும் விரும்பத் தக்கதே."

---

# அடையும், நடையும்.

இசைஞர், வேலூர், கோ. மணி அழகன்.

கலைவளர் தமிழகத்தே இனிமை பயக்க வல்லதா யிலங்கும் இசைத் தமிழுக்கு மிகச் சிறப்பானவை இரண்டேயாகும். அவற்றுள் ஒன்று 'சுருதி' மற்றொன்று 'சீர்' (லயம்). இச் சீரை உறுப்பு வேறுபாட்டுடன் பிரிப்பதே தாளமாகும். இது பல வகையாக இருப்பினும், ஈண்டு எடுத்துக்கொண்டது அடையும், நடையுமே.

'அடை' என்பதைக் காணுங்காலை இசைவாணர்கள் யாவரும் வியப்புறும லிருக்க வியலாது! காரணம், அடை என்ற சொல்லை இதுகாறும் செவிமடுத்திருக்கமுடியாது. 'அடை' என்ற சொல்லின் பொருள் தற்காலத்தில் 'கதி' என்று வடமொழியிற் வழங்குகின்றது. ஆனால் நடை என்பது மட்டும் எங்ஙனமோ வடமொழியில் வழங்காது தனித் தமிழில் வழங்குவது வியப்பே! அடை என்பது ஒரு குறுகிய கால அளவில் அடைக்கப்படும் எண்ணிக்கையாகும். அஃதாவது, பழந் தாளமாகிய 'ஆதி' தாளத்தை யெடுத்துக் கொள்வோம். இது நான்கு எண்ணிக்கையும், இரண்டு தட்டு வீச்சும் சேர்ந்து எட்டு எண்ணிக்கை யுடையதாகும். இவ் வெட்டு எண்ணிக்கையிலும் ஒவ்வொரு எண்ணிக்கையின் கால அளவே 'சீர்' (லயம்) எனப்படும். இச் சீருக்குள் அடைக்கப்படும் மாத்திரைகளையே 'அடை' எனப்படும்

இது மூவ் வெண் அடை, நான்கெண் அடை, ஐந்தெண் அடை, ஏழெண் அடை ஒன்பதெண் அடை (முறையே வடமொழியில் திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீரணம்) என்ற ஐவகை யுடைத்தாகும். எடுத்துக் காட்டாக,

**தாளம்: ஆதி.** [நான்கெண் அடை]

(சதுர்ஸ்ரகதி)

எண்ணிக்கை

1 2 3 4

தகதிமி, தகதிமி, தகதிமி, தகதிமி |

தட்டு வீச்சு தட்டு வீச்சு

5 6 7 8

தகதிமி, தகதிமி | தகதிமி, தகதிமி ||

[மூவெண் அடை]
(திஸ்ரகதி)

1 2 3 4 5 6 7 8
தகிட தகிட தகிட தகிட | தகிட தகிட | தகிட தகிட ||

[ஐந்தெண் அடை]
(கண்டகதி)

1 2 3 4
தகதகிட, தகதகிட, தகதகிட, தகதகிட |

5 6 7 8
தகதகிட, தகதகிட | தகதகிட, தகதகிட ||

[ஏழெண் அடை]
(மிஸ்ரகதி)

1 2 3 4
தகிடதகதிமி, தகிடதகதிமி, தகிடதகதிமி, தகிடதகதிமி |

5 6 7 8
தகிடதகதிமி, தகிடதகதிமி | தகிடதகதிமி, தகிடதகதிமி =

[ஒன்பதெண் அடை]
(சங்கீர்ணகதி)

1 2 3 4
தகதிகுதகதகிட, தகதிகுதகதகிட, தகதிகுதகதகிட, தகதிகுதகதகிட |

5 6
தகதிகுதகதகிட, தகதிகுதகதகிட |

7 8
தகதிகுதகதகிட, தகதிகுதகதகிட ||

இவைகளை யொத்ததே அடையெனப்படும். இவ் ஐவகைத் தமிழ்ப் பெயர்களைப்பற்றி ஆய்ந்து தீட்டுவாம்.

நிற்க கதியென்ற சொல்லை அடையென்று வழங்குவதா? என்ற வினா இசைவாணர்களுளத்திலெழாமலிருக்க வியலாதே! ஆனால் கதி யென்ற சொல்லைத் தமிழாக வைத்து பொருள் கொண்டால் தாளத்திற்கும், அதற்கும் தாமரை இலைமேல் விழுந்த நீர்த்துளிபோலாகின்றது. ஆகலான் ஓரெண்ணிக்கையின் கால அளவினுள் மேற்கண்ட ஐவகை இனத்தை முறையே ஒவ்வொன்றாக அடைப்பதால் இதனை 'அடை' என்று கூறுவது மிக்க பொருத்த முடைத்து.

'நடை' யென்பது ஒரு தாளத்தில் ஐவகைச் சொற்கொட்டு களை (ஜதிகளை) கலந்து அழகுபெறப் பாடுவதே. அஃதாவது நான்கெண் அடை யுடைய தாளத்தின்கண் ஏனைய நால்வகை இனத்தையும் முறையாகப் பங்கிடு செய்து பாடுவதாகும். எடுத்துக் காட்டாக மேற் கண்ட ஆதி தாளத்தில் காட்டுவாம்.

**தாளம்: ஆதி. சீர்: நான்கெண் அடை** (தகதிமி)

தகதிமி, தகதிமி, தகதிமி, தகதிமி | தகதிமி, தகதிமி | தகதிமி, தகதிமி ||

மேற்கண்ட முறையே நான்கெண் அடை யுடை ஆதி தாள மாகும். இதில் ஏழெண் நடையை எவ்வாறு நுழைப்பதெனின்,

தாளம்: **ஆதி. சீர்: நான்கெண் அடை. நடை: ஏழெண்** (தகிடதகதிமி)

தகிடத, கதிமி-த, கிடதக, திமி-தகி |
டதககி, மி-தகிட | தகதிமி,-தகிடத ||

மீண்டும் 'கதிமி' என்ற சொற் கொட்டுடன் தொடங்கினால் ஆக ஏழு வலமுடன் (ஆவர்த்தனமுடன்) ஆதி தாளத்தில் முடியும். இங்ஙனம் ஏழுவலம் வரை பாடவேண்டியதில்லை. ஒரு பாடலை நிரவல் செய்து, சுரக்கோவை பாடுங்காலை நடுநடுவே இம் மாதிரியாக ஐவகை இனத்தையும் காட்டிப் பாடினால் செவி மடுப்போருள்ளத்தில் சலிப்புப் பயக்காது. இதுவே 'நடை' யாகும். இங்ஙனமே ஏனைய தாளங்களில் எடுத்துக் கொண்ட அடையில் வேறு இனமுடைய நடையைக் கலந்தால் செவி மடுப்போருளத்தில் இன்பம் பயப்பதோடல்லாது பாடுவோன் புலமையும் நன்கு புலப்படுத்தும். இம் முறையில் இற்றைய நாட்டில் சிறந்து விளங்கியவர் காலஞ் சென்ற பெருமிசைப் புலவர், **காஞ்சி நைனு பிள்ளையும்**, இவர் மாணவரும், எம் மாசிரியரு மாகிய, இந்த நாட்டில் புகழுடன் திகழும் பேராசிரியர் **இசை மன்னர், சித்தூர். சுப்பிரமணிய பிள்ளை**யுமே யாவார்.

அடையில் வரும் சில நுணுக்கங்களைப்பற்றிச் சிறிது ஆராய் வாம். இற்றைய நாட்டில் வழங்கிவரும் ஒருசில பாடல்களை நீக்கி ஏனையவைகள் நான்கெண் அடையாகவே அமைந்துள் ளன. இப் பாடல்கள் சமம், கால், அரை, முக்கால், ஒன்றரை இடங்களில் அமைந்துள்ளன வென்பது கண்கூடு. இதைப் போன்றே எண்ணிக்கைகளிலும் *கிளைகளாக வகுத்துப் பாடு

---

*இக் 'கிளை' தற்போழ்து 'களை' என்று வழங்குகின்றனர். கிளை யென்ற சொல்லே நாளடைவில் திரிந்து களையாக மாறிற்று.

வது முண்டு. அஃதாவது ஒருகிளை, இருகிளை, முக்கிளை, நாற்கிளை என்பது போன்று நீளமாகச் செல்லுகின்றன. இவைகளுள் இருகிளை வரையே பாடல்களுக் கேற்றதாகும். இதில் ஒரு கிளையி லமைந்த பாடலின் எடுப்பு, சமமாக இருப்பின் அப் பாடலைப் பாடி இறுதியில் சுரக் கோவை பாடுங்காலை பாட்டு எவ் வெண் அடையில் அமைந்துள்ளதோ அதற்கு மாறு பட்ட வேறின முடைய அடையை நுழைத்துப்பாடி, மீண்டும் தொடங்கிய அடையுடைய பாடலின் அடியைப் பாடுதல் வேண்டும். வலிமை யிருப்பின், அவ் வடியை மட்டும் மாற்றிய அடையிலே சிறிது நேரம் பாடி மீண்டும் பழைய முறைபோல் பாடி முடிக்கலாம். ஆனால் ஒரு கிளையில் 'சமம்' அல்லாத இடங்களில் இவ்வாறு அடைபேதம் செய்வது இலக்கணத்திற்குப் பொருந்த மன்று. எவ்வாறெனின், நான்கெண் அடையுடைய தாளத்தின் அரை இடத்தில் பாடல் தொடங்கினால் இதை அடைபேதம் செய்ய வியலாதே. எடுத்துக் காட்டாக முத்துத் தாண்டவர் பாடலை எடுத்துக் கொள்வாம்.

*நிறம்*.........[சாசாங்கி]* *இடம்: அரை.* *அடை: நான்கெண்.*

*தாளம்: ஆதி.*

(கடையடியின் முதல்வரி)

தக–(;) செந்திருமாலயன் | ; இந்திரன் | மாதவர் ||

இதை நிரவல் செய்து சுரம்பாடுங்காலை அடை பேதமாக்கலாமா? என்றாராயுங்கால் இயலாதென்றே புலனாகின்றது. காரணம், ஓரெண்ணிக்கையில் நான்கெண் அடைபட்டு, பாடலமைந்து, தொடக்கத்தில் இருமாத்திரை (ஈரெழுத்து) நீக்கித் தொடங்குவதால், நான்கெண்ணில் அரைபாகம் ஈரெண். இதில் அரை பாகம் ஓரெண். இதுபோன்று ஏனைய இனங்களில் பிரிக்க வியலாமையால், ஏனைய இனங்களை அடைத்து அரையிடம் பாட்டை தொடங்க வியலாது. எங்ஙனமெனின், 'தகதிமி தகதிமி' என்று செல்லும் பாடலின் அரையிடத்தில் (மேற்கண்ட பாடலைப் போன்று) 'தகிட, தகிட' என்ற மூவ்வெண் அடையை நுழைத்து சுரம்பாடி மீண்டும் அரையிடத்தில் பாடலைத் தொடங்கவேண்டுமெனின், மூவ் வெண்ணில் அரை பாகமாகிய ஒன்றரை மாத்திரை, அதாவது ஒன்றரை சுரம் பாடிதான் தொடங்கவேண்டும். 'ச' என்று சொல்லுங்காலை

---

............*இப் புள்ளியுள்ள இடத்தில் பழங்காலத்து வழங்கிய நிறங்களின் தமிழ்ப் பெயர்கள் போன்று ஒருகாலத்திலேனு மென்பதொருதலை!

# ஐயுணர்வும் மெய்யுணர்வும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நிலையினை விரும்பி அதன்கட் செல்ல முயல்வாராய மாந்த ரெல்லோரும், உயிர்த் தன்மையினை உணர்வுக் கருவியாகக் கொண்டு காரணம் தேர்ந்து, தக்கது செய்து தகாதன விலக்கிச் செல்வத்தின் கண்ணும் யாக்கையின் கண்ணுமுள்ள பற்றினை விட்டு, உலகியல், உயிரியல், கடவுளியல் என்பவற்றை அறியும் மாண்பிலே நாட்டத்தை யுடையராவர். நிலம், நீர், தீ, வளி விசும்போ டைந்தும் கலந்த மயக்க வுலகில், பொறிகளின் தொடர்பும், நுகர்ச்சியும் நாடாதே, பொறி யளவின் மேற்

---

ஏற்படும் ஒரு மாத்திரையை அரைப்பாகமாக்கி, அதைச் சுரவடிவில் முயற்சிப்பது முயற் கொம்பு அங்ஙனம் பாடுவதென்றால் ஓரெண்ணிக்கைக்கு ஆறு மாத்திரையாக நுழைத்து அதில் அரை பாகமாகிய மூன்று மாத்திரையை (மூன்று சுரங்களை)ப் பாடி, அரையிட நான்கெண் பாடலைத் தொடங்க வியலும். இதுவும் முக்கால் இடத்தில் அமைந்துள்ள பாடலுக்கு முடியாததே! இஃதெவ்வாறெனின், மேற்கண்ட கணக்குப் படியே. இதைப் போன்ற ஏனைய ஐந்தெண், ஏழெண், ஒன்பதெண் முதலிய வகைகளை சமம் அல்லாத இடத்திற்கு நுழைத்துப் பாடுவது அரிதே.

ஆனால், இரு கிளையுடைய பாடலின் அரை யிடத்தில் ஏனைய இனங்களின் எண்ணிக்கையை அடைத்து பாட வியலுமென்பது வெள்ளிடை மலைபோல் விளங்காநிற்கும். இதுவும் முக்கால் இடத்திற்கு இயலாததே. ஆகலான் சமம் அல்லாத இடங்களில் ஒரு கிளை யுடைய தாளத்தில் அடை பேதம் செய்வது அறிவிற்கு அவ்வளவு பொருத்தமன்று. கிளைகளுடைய தாளங்களில் அடைபேதம் செய்ய வேண்டுமெனின், கணக்கிற்கும், அறிவிற்கும் பொருத்த முடையதாக இருப்பின் அங்ஙனம் செய்து பாடலாம். ஆனால் நடையோ, எத் தாளத்திலும், எவ்வினமுடைய அடையிலும் பங்கிட்டுப் பாட வியலும். ஆகலான், நடைக்கு எதிரிடையான சொல்லழகும் பொருத்தமும் பெற்ற ‘அடை’ யென்ற தனித் தமிழ்ச் சொல்லை வழங்கி அதன் முறைகளை நன்கு ஆய்ந்து கையாளுவதே சால்புடைத்தாகும்.

பட்ட மன னுணர் வுடையாரே உலகக் கட்டறுத்து வீ டெய்துதற்குரிய மக்களென்று உயர்த்துச் சொல்லப்படுவர். இத் தகையார் மனனைப் பொறி வழிச் செல்லாமல் அடக்கும் திறன் வாய்ந்தும், உலகியலால் செய்யத் தகுவது அறிந்தும், பொறியின் வேருக மன வுணர்வான், முப் பொருளுண்மை யினை உணரும் முழு ஆற்றலும் அதற்கேற்ப ஏற்றமு முடையவராய்த் திகழ்வர்.

ஐம் பூதக் கலப்பால் உலகமும் உயிர்த் தொகுதிகளும் ஆயினவாயினும், ஐம் புலன்களும் இலார்க்கு, உயிர்ப் பொருள் களும் இவ் வுயிர்ப் பொருட்கட் காதரவான உலகமும் இல்லை யெனலாம். யாக்கையோ ஐம் பூதங்களாலாகிய ஊன் குடில்—கூண்டு. ஐம் புலன்களில் யாதாயினும் ஒன்று ஒருவனுக்கு இல்லையாயின், அப் புலனால் உணரக் கூடிய உலகப் பொருள்களும் அன்னவனுக்கு இல்லா தொழிகின்றன. பொதுவாக, மெய் வழியாக ஊறு அறிதலும், நாவின் வழியாகச் சுவையினை அறிதலும், மூக்கின் வழியாக மணத்தை அறிதலும், கண்ணின் வழியாக உருவத்தை அறிதலும், காதின் வழியாக ஒலியை அறிதலும் உலகத் திடைப்பட்ட பிறப் பிறப் புற்ற உயிர்கட்கு வெளிப்படை. புல னறிவுகள் ஐந்தும் அவற்றைப் பகுத் தறிந்துணரும் மன அறிவு ஒன்றுமாக அறுவகைப்பட்டு உயிர்கட் குரியதாக அமைந்த அறிவு நிலைகள் யாவும் இயற்கை வகுப்பும் படைப்பு மாய் வயங்கி நடைபெறு மியல்பை உண்மை வளனும் நலனும் தோன்ற ஆசிரியர் தொல்காப்பியர்,

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

என விதந் தருளிய திறன் உள்ளுந்தோறும் எத்துணை மாட்சித்து! ஆருவது அறிவின் மேலதாகப் பிறவும் உள வென்று யாண்டும் எவரும் எடுத் துரைத்ததும் கேட்டிலம்; அறிகிலம்.

விலங்கொடு மக்கட்கு ஒப்பது ஐம் புல அறிவானதால், விலங்கினைப் போன்று பொறி யளவாக உணர்வுடையாரை மாக்களென்று குறியிட்டு அன்னாரை ஐயறி வுயிருள் அடக்கி 'மாவும் மாக்களும் ஐயறி வுயிரே' எனத் தொல்காப்பியர் விதந் தோதினர். பொறியின் தொடர்பில்லாது உணரும் மக்களது மன னுணர்வு இத் தகையாருக்குப் பாழ் போயின மையின், அன்னவர் மக்கள் வடிவின ராயினும், ஐம் பொறி வழியே நின்று, கண்டதே காட்சி கொண்டதே கோல மென ஒழுகும் மடவோரா யிருத்தலைக் கண்டு தொல்காப்பியர் விலங்கொடு அவரைச் சேர்த்து ஒதுக்கி வைத்தது அறியற் பாற்று. ஐம் புலன்களால் உணரப்பட்டவற்றுள் மெய் யிது பொய் யிதெனப் பகுத்தறிவதையே மன னுணர் வென்றும், பொறியின் வயப்படாத மன வுணர்வுடையாரே மக்கள் எனவும் ஆசிரியர் தொல்காப்பியர் கொண்டா ரென்பது 'மக்கள் தாமே ஆறறி வுயிரே', 'ஆறறி வதுவே அவற்றொடு மனனே' என்ற சூத்திரங்களால் புலனாகும். புலனாகவே, புலனும் மனனும் மாட்சி யுற வேண்டுவோர் பிறவிப் பயன னடைவா ரென்ற உறுதி ஏற்புடைத் தென்பது கொள்ளத் தகும். மக்களுக்கும் மாக்களுக்கு முள்ள வேற்றுமை குறிக்கும் சொல் வழக்கு, தொல்காப்பியருக்குப் பின் அவரது கருத்துக் குப் பிறழாதும் மாறுபடாதும் உயிர்ப்புடன் ஓங்கி நிற்றல்,

'செவியிற் சுவையுணரா வாயுணவின் மாக்கள்
அவியினும் வாழினும் என்'

'கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து'

'தவஞ்செய் மாக்கள் தம்முடம் பிடாஅ
ததன்பய னெய்திய அளவை மான'

என்பன போன்ற செவ்வுரைகளினால் தெற்றென அறியப்படும்.

பொறி வாயிலாக எழும் ஐந் துணர்வையும் ஆமை போல் அடக்கி இவ் வுலகில் சிறப்பாக அறியலான முப்பொருள்கள், உலகமும், இறைவனும், உயிருமே. 'இறைவன் பொருள் சேர் புகழ்' என்றவிடத்து, உண்மையும் பொருளும் ஒரு பொருளனவாதலாக நிற்றலின், அப் பொருண்மையினைப் பொறியானன்றி மனத்தான் அறிதல் பெரிதும் வேண்டற் பாலது. ஐம் புல அறிவு மெய்யறியாவழிப் பயனின்று.

ஐம் புலன்களோடு கூடி மக்கட்குச் சிறப்பு நல்கும் பகுத்தறியவல்ல மன வுணர்வு இல்வழி, ஐயுணர் வடக்கியும் அதனால் அறியப்படுவனவாயுள்ள நிலைகளெல்லாம் உறையப் பெறினும் அவ் வறிவாலாம் பயன் சிறிது மில்லை. எனவே, மன னுணர்வாம் பகுத்தறிவு பொறியின் வேறாக நிற்றலான், அஃது எத் தன்மைத் தென்பது, பேராசிரியர் 'ஐயுணர் வின்றிக் கனுப் போலத் தானே உணர்வது மன வுணர்வெனப் படும்' எனக் கிளந்து கூறுமாற்றான் ஒருவாறு உணர்ந்து கொள்ளப்படும்.

பெறலரும் மானிட யாக்கையா லாய பயனை எய்த, மனத்தான் உணரப்படும் மெய்ப்பொருள் யாதென முதற்கண் உணர்தல்வேண்டும். ஏனெனின் பொருள்களின் உண்மையை மருளானன்றித் தெருளுணர்வால் உணர்கின்றவழி, பிறவித் துன்பம் நீங்கும். இதனான் இன்ப ஆக்கம் மெய் யுணர்வால் எளிதே உளதா யுள்ளது என்பது அறியப்படலாயிற்று. மெய் யுணர்ந்த ஞான்று மாசறு காட்சி—இன்பநிலை, புலனாகிய வழி, அந் நிலையில் கருத்தூன்றிப் பழகப் பழக, பொறி யுணர்வால் உணரப்பட்ட உலகிய லுணர்வு பையப் பையக் கெட, மெய்யுணர்தல், சேய்மைக் கண்ணுள்ளதாய வீட்டுலகத்தை, வையத்தே நனி அணியதாகச் செய்யும். கூறும் உலகியற்கை கூடினும், மெய்ப்பொருளை ஐய மறக் கண்டவர், சேற்றில் பிள்ளைப் பூச்சி போன்றும், நீரிற் படகு போன்றும் பொய் யுலகத்தே அழுந்தாது வீட்டுலகத்தையே பொருந்தி நிற்பர். ஏனெனின் இருளையும் மருளையும் நீக்கி வீட்டின்பம் பயப்பது மெய்யுணர் வன்றி ஐயுணர் வின்று எனவே உலகத்து முப் பொருளுண்மையினை உணர்ந்து, பின்னர் உண்மையும் தோற்றமும் பகுத்துத் தோற்றத்தை நீக்கி உண்மையைக் கைக்கொண்டு, தோற்றமும் ஈறும் இல்லாதது பரம் பொருளென நுனித் தறிந்து, அப் பொருளின்கண் மன அறிவினைத் தோய்ந்து நிற்றலே மெய் யுணர்வு நிலையாகும். ஆதலாலே மெய் யுணர்வு நிலையே பிறப் புரிமையாகவும் பிறவிப் பயனாகவும் மக்களாய்ப் பிறந்தார் ஓர்ந் துணர்ந்து ஒரு தலையாகப் பெற வேண்டுவது இன்றியமையாத தாயிற்று.

மெய்ப்பொருளாகிய இறைவனைக் கண்ணுறக் காண்டற் குரிய மெய் யுணர்வு, கல்வியா னெய்தற் பாலதாதலின், காண்டற்குக் கற்றல் முதற் காரணமாயது. கற்றுத் துறை

போகிய காட்சியருக்கு மெய் யுணர்வால் வீடு அணித்தாயிற் றுதலான், கல்வியும் ஒரு வாற்றான் வீட்டினையும் பயக்கு மென்பதை,

'கற்பக் கழிமட மஃகும் மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும், அந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்'

என்னும் நான்மணிக் கடிகைச் செய்யுள் நவிலும். இந் நுண் மாண் இனிய கருத்தை,

'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாக் கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பர் மன மணி விளக்கை'

என்ற திரு விசைப் பாவும்,

'எல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே'

என்ற திரு மந்திரமும் இனிது புலப் படுத்துவன வாயின. இவ்வாறு மெய் யுணரக் கற்றுக் கேட்ட மெய்ப்பொருளை மனங்குவிய ஆய்ந்து சிந்தித்து உணர உணர, உயிர் தன் அறியாமை கெட்டுப் பக்குவ மடைந்து தெளிந்து செம் பொருளோடு ஒற்றுமை யுற இடைவிடாது பாவித்தல் மூலம், அன்பொடும் அமைதியொடும் வழிபடும். அச் செம் பொருளும், உயிர் மெய் யுணர்வு நிலையினை நண்ணும்போது தன்பாற் கொண்ட அன்பின் முதிர்வை நோக்கி, இரு வினையை

ஈடழித்தும், முன்புள்ள வினை யத்தனையும் முழுதழித்தும் துவந்துவங்களைத் தூய்மை செய்தும் அதன் அன்பிலும் அறிவின் கண்ணும் இன்புருவாய்த் தோன்றி எக்காலத்தும் நிலைபெறும். உயிரும், பழுக்கக் காய்ச்சிச் சிவந்த இரும்புண்ட நீர் போன்று செம்பொருளிற் கலந்து, வினைப்பிறவி சாராமே மீண்டு வாரா நெறியில் அடங்கி நிற்கும். எனவே கற்பவை கற்றவழி கேட்டல், சிந்தித்தல், தெளிதல், பாவித்தல் என்ற நிலைகளே பிறப்பினை அறுக்கும் பான்மைத்தாய் நின்று, வீடு பேற்றிற்குக் காரணமாய மெய் யுணரும் ஆறு என்பதூஉம் அறியப் பெற்றும்.

மெய் யுணர்விற் பழகினர் உண்மைச் சார்பு யாதெனவும் சார்பல்லாதவை யாவை யெனவும் உணர்ந்து சார்பல்லாதவை அற ஒழுகின் அவர் தம் உள்ளத்தூறும் உணர்வு வீடு பேற்றை யும் உண்மை இன்பத்தையும் அளிக்கும். இதனுனே இறைவன் அருளைச் சார்ந்தும், செந் நெறியில் நிலைத்தும், காரணமாய குற்றங்களைக் கெடுத்தோர், காரியமாய இரு வினைகளைச் செய்யாமையான், அவருக்குச் சாரக் கடவனவாகிய துன்பங் களும் இல்லை யென்பது பெறப்படும். தேடரிய செம் பொருளைத் தேர்ந்து, வெம் பிறவியற்ற வழி, உயிரான் நுகரக் கிடந்த வினைச் சார்பும் வினைப் பயன்களும், காரிருள், ஒளி விளக்குப் புகக் கரந்தாங்கு, ஒழியும். ஆகவே தன்னைத் தானறியும் மெய்யுணர்வே வீடு பேற்றிற்கும் உண்மை அறிவுக்கும் மெய்யாருகும்.

அறிவாவது எத் தன்மைத்து என்ருர்க்கு, பொய்யில் புலவர்,

'எவ்வ திறைவ துலக முலகத்தோ
டவ்வ திறைவ தறிவு'

என்ற குறளில் உலகத்தைத் தழுவி நடப்பது அறிவென்றும்,

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்பதில் கேட்கப்படும் சொல்லைப் பொருளின் பயனோக்கி உண்மை இன்ன தென்பது ஐயத்தினீங்கித் தெளியராய் ஆய்ந்து துணிதல் அறிவென்றும்,

'எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு'

என்பதில் விரிந்த கல்வியானும் ஆழ்ந்த, நூலாராய்ச்சியானும் சொற் பொருளைப் பயனோக்கிக் காண்டல் அறிவென்றும்,

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்பதில், மனித உள்ளத்திற்கு உணர்ச்சியையும் இன்பத்தையும் ஊட்டும் இயற்கைப் பொருள்களினூடும் இவ் வுலகைப் படைத்துக் காத்து அளிக்கும் பரம்பொருளை உண்மையானுணர்ந்து காண்பதே அறிவு என்றும், அறி வென்பதூஉம் மெய் யென்பதூஉம் ஒன்றே என்றும் விளக்கியுள்ளார்.

ஓரோவழி ஆயின், ஓரளவுக்குச் சில அறிவ னூல்கள் பிறர் மதங்களைக் களைந்து தம் மதங்களை நிறுவுதல் இயல்பாயினும், அவை நுதலும் உரையுள்ளும் உண்மைப் பொருளொளி வீச லின்மையான், ஐயம் நிகழினும் நிகழும். பல தலையாய உணர்வினை ஐய மென்றார் பரிமேலழகர். உள்ளக் கருத்தால் உண்மையல்லாத பிறி தொன்றை உள்ள பொரு

ளென்று உள்ளுவாரது ஐயத்திற்கு விடை யளிப்பான் அறி வொளி விளக்கை அணைப்பவனுவன். மறு பிறப்பும், இரு வினைப் பயனும், இலவோ உளவோ இறைவன் உளனே இலனே என ஒன்றினும் துணிவு தோன்றுதே உழன்று திரியும் காரறிவு, மெய்யுணர்வு இல்வழி உளதாவதாகலான், அநுபவத்தால் பொருண்மை சுட்டி முடிபு காண வல்லார், காரறிவா லெழும் மயக்க உணர்வு இல்வழி, மெய்யுணர்வு எளிதே தெளியப்படுதல் உணர்வார். ஐயத்தைப் போக்குதலே உண்மை அறியும் நெறியாகும். அறியும் நெறியோ, அருளுருக் கொண்டு உண்மைப் பொருளை உணரும் முறைமை யாகும். உண்மை அநுபவ மின்றி யாத்த வெறும் நூலறிவி னுற் பெறப்படுவது மெய்யுணர்வாகாது. எனவே மெய்யுணர்வு இல்லா வழி ஐயுணர் வெய்திய மக்கட் பிறவி பயனுருது.

> 'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
> மெய்யுணர் வில்லா தவர்க்கு'

என வள்ளுவர் கூறி யருளியது இவண் அறியற் பாற்று. எனவே மெய்யுணர்வும் உள்ளத் துண்மை உரமு முற்றுரே சிறப்பு எனும் செம் பொருளையும் காண்ப ரென்பதூஉம், திருவருளையும் உணர்வா ரென்பதூஉம் பெற்றும்.

(தொடரும்)

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

## கலைமகள் விழா வெளியீடு—1949.

---

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த இந்த யாண்டின் கலைமகள் விழா முதல் நாள் (22-9-1949) தலைமை தாங்கிய தஞ்சை மாவட்டத் தலைவர் திரு. T.K. சங்கரவடிவேற் பிள்ளையவர்கள் திறப்பு விழாத் தலைமையுரையில் பல அறிவுரைகளும், அறவுரைகளும், அரும் பெருங் கருத்துக்களும் பொதிந்திருப்பதால், தமிழ் மக்கள் யாவரும் அறிந்து பயன் பெறுவதற்காக அன்னார் பேசியபோது எடுத்த குறிப்புக்களைக் கொண்டு அச்சொற்பொழிவின் சுருக்கம் அச்சிட்டு வழங்கப் பெறுகின்றது.

### தலைவரின் உரைச் சுருக்கம்.

தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்குந் தொண்டாற்றிவரும் அன்பர்களாகிய உங்களைக் காணும் பேற்றையும், இக் கலைமகள் விழாவிற்குத் தலைமை தாங்குஞ் சிறப்பையும், தாங்களாற்றுந் தொண்டில் யானும் ஈடுபடும் வாய்ப்பையும் அளித்த இச் சங்கத்தாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சைப் பெரிய கோவிலைப் பார்க்கும் போதும் எண்ணும்போதும், அதை எடுப்பித்த இராசராசனின் நினைவு நமக்கு முன்னிற்கின்றது. காவேரிக் கல்லணையைப் பார்க்கும்போதும், எண்ணும் போதும், அதைக் கட்டுவித்த கரிகாற் சோழன் நினைவு நமக்கு முன்னிற்கின்றது. அது போலவே, இக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பார்க்கும்போதும், எண்ணும்போதும், இதைத் தோற்றுவித்து வளர்த்து அரும் பெருந் தமிழ்த் தொண்டு செய்த தலைவர், தமிழவேள், செந்தமிழ்ப் புரவலர் திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் நினைவே நம்முன் நிற்கின்றது. முன்பொரு நாள் நம் மாகாணச் சிறப்பு மிக்க முதலமைச்சர் இவ்வழியே செல்லும்போது இச் சங்கத்தின் முகவரிப் பலகையைக் காண நேர்ந்தது. உடனே சிறப்பு மிக்க முதலமைச்சர், ‘ இது உமாமகேசுவரம்

பிள்ளையது தொண்டின் பயனல்லவா?' என்று கனிந்த குரலிற் பாராட்டிப் பேசினர்கள். ஆகையால் வருங்காலத் தமிழகத்திற்கு இச் சங்கம் சிறந்த துணையாக விளங்குமென்று கருதுகின்றேன்.

இக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நடத்திவரும் பல தொண்டுகளைத் திருவாவடுதுறை யாதீனத் தலைவர் அவர்கள் மேற்கொண்டு ஆற்றி வருவதற்கு அண்மையில் அருள்கூர்ந்துள்ள செய்தி யாவருக்கும் மகிழ்ச்சியளிப்ப தொன்றாகும். நம் நாட்டுச் சமயத் தலைவர்கள் சமயப் பிரசார மொன்றை மட்டுஞ் செய்து வருவதோடு நின்றுவிடுகின்றார்கள். இவர்கள் கிரித்தவப் பாதிரிமார்கள் போலக் கல்விச் சாலைகள், தொழிற் பயிற்சி சாலைகள், மருத்துவ சாலைகள், கருவுயிர்ப்பு விடுதிகள், திக்கற்றவர் விடுதிகள், மாணவ ரில்லங்கள் போன்ற மக்களின் மற்றத் தேவைகளுக்கான நிலையங்களையும் நிறுவி நடத்த முன்வரவேண்டும்.

"ஹிந்து" என்னும் ஆங்கிலத் தினத் தாளில் ஞாயிறு தோறும் வெளிவரும் இதழ்களில் சென்ற சில வாரமாகச் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசியரொருவர் தொடர்ந்து பல கட்டுரைகள் எழுதி வருகின்றார். அக்கட்டுரைகளில் "மக்கள் முதன் முதல் தென்னிந்தியாவிற் றோன்றிப் பின்னர் பிற இடங்களுக்குப் பரவினர் என்றும், நாகரிகம் தென் னிந்தியாவிலிருந்துதான் பிற இடங்களுக்குப் பரவியிருக்க வேண்டு மென்றும் பல தக்க சான்றுகளோடு அப் பேராசியர் குறித்துள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் திரு. P.T. சீனிவாச ஐயங்கார் அவர்களும் மனிதன் முதன் முதல் தோன்றிய இடம் தமிழ் நாடுதானென்று வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கினுல், அம் மொழி யாவரையுந் தன்னிடத்தே வசப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. தொன்மை, தூய்மை, மென்மை. வன்மை என்னும் பண்புகள் வாய்ந்தது தமிழ்மொழி, போற்றற்குரிய பேரறிஞர் ஜி. யு. போப் என்னும் மேனுட்டுப் பெரியார், கடவுளின் ஆணை இது என்று,

தம் எழுபத்தைந்தாவது ஆண்டில் திருவாசகம் என்னுந் தமிழ் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கிப் பத்தாண்டுகளில் மொழிபெயர்த்து முடித்துள்ளார். பிறகு, தாம் இறக்கும்போது தம் கல்லறை மீது தம்மை "ஒரு தமிழ் மாணவன்" என்று பொறிக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளார். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குப் பிறகு சிறந்த கவிகள் தமிழ் நாட்டில் தோன்றாதது பெருங்குறையே. இக் காலத்தில் மேலெழுந்த வாரியாகப் படிக்கும் எளிய நூல்கள் இலக்கிய நூல்கள் என்ற பெயரில் வெளி வருகின்றன. சிந்தனையை விரிவுபடுத்தும் ஆற்றலும், புதுப்புதுக் கருத்துக்களைத் தோற்றுவிக்கும் இயல்பும் வாய்ந்த சிறந்த நூல்கள் பல வெளிவர வேண்டும். மக்களுஞ் சிறந்த நூல்க ளெழுதுவோரை ஆதரிக்க முன் வரவேண்டும். நூல்கள் வெளியிடுவோர் நூல்களின் அட்டைகளைக் கவர்ச்சியாகவும் அழகாகவும் அமைப்பதிற் செலவழிக்கும் பொருளை, அந்த நூல்களின் உள்ளே அடங்கியிருக்கும் பொருள் சிறந்ததாக இருக்கும்படிச் செலவழிப்பதால் மக்கள் மிகப் பயன் பெறுவர்.

உலகஞ் சீர் குலையாமலிருக்கும்படி மக்களை நன்னெறியிற் செலுத்த இறவாத புகழ்படைத்த ஒழுக்க நூல்களை இயற்றுவதற்குத் திருவள்ளுவர் போன்ற புலவர்கள் தமிழ் நாட்டில் தோன்றவேண்டும். பிற நாட்டு நல்லறிஞர் நூல்களைத் தமிழ் மொழியி லியற்றுவதற்குக் கம்பர் போன்ற புலவர்கள் தமிழ் நாட்டில் தோன்ற வேண்டும். அவ்வக்காலத்திய வரலாறுகளை இலக்கிய வடிவி லமைத்துப் பிற்காலத்தவர்க்குப் பயன் படச் செய்ய இளங்கோவடிகள் போன்ற புலவர்கள் தமிழ் நாட்டில் தோன்றவேண்டும். இதுவே தமிழ் மொழிக்குத் தற்காலத் தேவையாகும் என்பதுபடத் தேசிய கவி பாரதியார், 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை.' என்று இம் முப் புலவர் பெருமக்களைச் சிறப்பித்துக் கூறுகின்றாரென் றெண்ணுகின்றேன்.

உலகப் பொது மறை யாகிய திருக்குறளை யாவருங் கற்றுப் பயன்பெறும் வண்ணம் இந்திய வானொலி நிலையங்களில் திருக்குறள் வகுப்புக்கள் நடத்தினால் பல்லாயிர மக்கள் பய னடைவர்.

தாம் அரிதிற் றேடிக் கற்றுக்கொண்ட கலைகளை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்காமல் சிலர் மறைந்து விட்டபடியால், பல அரும் பெருங் கலைகள் நம் நாட்டில் மறைந்துவிட்டன. அத் தவறு மீண்டும் நிகழாமலிருப்பது நன்று.

பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் மக்கள் சாதி, சமயம் என்ற வேற்றுமை பாராட்டாது தமிழை வளர்த்துள்ளார்கள். பௌத்தர்களும், சமணர்களும், கிரித்தவர்களும், மகம்மதியர்களும் தமிழ் நூல்கள் பலவற்றை இயற்றித் தமிழை வளம்படுத்தி யுள்ளார்கள். அவ்விதமே தமிழ் மக்கள் யாவரும் தத்தம் அரசியல், சமயம், சாதி முதலிய வேற்றுமை பாராட்டாது தமிழ் வளர்க்க முன்வர வேண்டும். இப்போதுள்ள அரசியலார் நம் தாய் மொழி யாகிய தமிழ் மொழிக்குப் பெருமையளித்துள்ளார்கள். அதன் முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் வகுத்துள்ளார்கள். அவைகளைத் தமிழ் மக்கள் நன்கு பயன் படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தமிழ் மொழிக்கென ஒரு அரசவைப் புலவரை அண்மையில் நம் அரசியலார் நியமித்துள்ளார்கள். இக் கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பிற் பயிலும் மாணவர்கள் அவ்வரசவைப் புலவர் பதவியைப் பெறுவார்கள் என்று யான் எதிர் பார்க்கின்றேன். கடவுள் விழாவில் அன்பு விருந்து வழங்கப்படுவதுபோலக், கலைமகள் விழாவில் அறிவு விருந்து வழங்கப் பெறுவதியல்பே. இன்று முதல் பத்து நாட்களுக்குப் பேரறிஞர்கள் பலர் சிறந்த பொருள் பற்றி விழாப் பேருரை ஆற்றுவார்கள். மக்கள் யாவருங் கேட்டுப் பயன் பெறுவார்களாக! இவ் விழா இனிது முடிய இறைவன் திருவருள் முன்னிற்பதாகுக.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!!

---

# இசைத் தமிழ்ப் பாடல்.

திருஞானசம்பந்தர் அருளியது. திரு ஆரூர்த் தேவாரம்

இசையாளர் சங்கீதம் திரு. ப. சுந்தரேசன், கும்பகோணம்.

## பண்: நட்டபாடை.

இராகம் : நாட்டக்குறிஞ்சி.] [தாளம்: சதுரச்ர ஏகம்.
=|= நான்கெண்.

28-ஆவது
அரிகாம்போதியிற் பிறந்தது.

ஆ.—ச ரி க ம த நி ச்
அ.—ச் நி த ம க ச

புண்ணியர் பூதியர் பூதநாதர்
புடைபடுவார்தம் மனத்தார் திங்கள்

கண்ணியர் என்றென்று காதலாளர்
கைதொழு தேத்த இருந்த வூராம்

விண்ணுயர் மாளிகை மாடவீதி
விரைகமழ் சோலை சுலாவி யெங்கும்

பண்ணியல் பாடலறாத ஆரூர்ப்
பசுபதி யீச்சரம் பாடு நாவே.

## முதலடி

1. ; மா ; கா சா ; ; ; || ; சா ; ரி க மா ; ; ; || ; கா ; மா தா ; மா ; ||
; புண் ; ணி யர் ; ; ; || ; பூ ; தி , யர் ; ; ; || ; பூ ; த நா ; தர் ; ||

2. ; மா ; கா ரி க ம க சா ; || ; சா ; ரி க மா ; ; ; || ; கா ; மா த நீ த மா ; ||
; புண் ; ணி ய , , , ர் ; ; || ; பூ ; தி . யர் ; ; ; || ; பூ ; த நா . . தர் ; ||

3. ; மா ; கா ம க ரி க ம க சா || ; சா ; ரி க மகமா ; ; ; || ; கா ; மா தநி ச்நி த மா ; ||
; புண் ; ணி ய . . . . . ர் || ; பூ ; தி . ய . ர் ; ; ; || ; பூ ; த நா . . த ர் , ; ||

; மா தா நீ தா ; த நி ச்ா || நி தமா;; தா நீ ச்ா ; || நீ த நீ பா , தா நீ ச்ா ; ||
; பு டை ப டு ; வா , ர் || தம் , , ; ம ன த்தார் ; || திங் . . . , க . ள் ; ||

4. ; மா ; கா மகரிகமகசா || ; ரி கமக ரிக மகமா ; ; || ; கா ; மா த நி ச் நி த மா ; ||
; புண் ; ணி ய . . . . ர் || ; பூ . . . தி . . . யர் ; ; || ; பூ ; த நா . . . த ர் ; ||

; மா தா நீ தா ; த நிச்ா || நித மா;; தா நீ ச்ா ; || நீ த நீபா, தாநீ சா ; ||
; பு டை ப டு வா . ர் || தம் . . ; ம ன த்தார் ; || திங் . . . க . . ள் ; ||

5. ; மா ; கா ம க ரி க ம க சா || மகரிக மகரிக மகமா ; ; || ; கா ; மாத நிச்நி தமா . ||
; புண் ; ணி ய . . . . ர் || பூ . . . . . தி . . . யர் ; ; || ; பூ ; த நா . . , தர் . ||

; மா தா நீ தா ; த நி ச்ா || நிதமா ; ; தாநீச்ா ; || நீ த நீ பா , தாநீச்ா ; ||
; பு டை ப டு ; வா . ர் || தம் . . ; ; மனத்தார் ; || திங் . . . க . ள் ; ||

## துணையடி

1. ; சா ; சா சா ; ; ; || ச்ா ; ச்ா ; தா நீ ச்ா ; || ; தா ; நீ ரீ ; ச்ா ; ||
; கண் ; ணி யர் ; ; ; || என் ; று ; எ ன் று ; || ; கா ; தலா ; ளர் ; ||

2. ; சா ; சா சா ; ; ; || ச்ா ; சா ; தா நீ ச்ா ; || ; தா ; நீ ச் ரி க்ா ச்ா ; ||
; கண் ; ணி யர் ; ; ; || என் ; று ; எ ன் று ; || ; கா ; த லா . . . . ளர்; ||

3. ; சா ; சா சா ; ; ; || ச்ா ; ச்ா ; தா நீ ச்ா ; || ; தா நீ ச்ா ரி க்ம்க் ச்ா ||
; கண் ; ணி யர் ; ; ; || என் ; று ; எ ன் று ; || ; கா ; த லா . . . ளர் ; ||

; தநீ , நிச் ரீ ; ச் நிதா || நி தமா ; ; ; மாகா || ரீ ; க ம ப பா காரீ சா ; ||
; கை, தொ, ழு ; தே , , || த்த , , ; ; ; இருந் || த ; ஆ . . . . ராம் ; ||

4. ; சா ; சா சா ; ; ; || ச்ா ; ச்ா ; தா நீ ச்ா ; || தா நீ ச்ரிக்ம் க்ரிக்ம் ம்க்ச்ா ||
; கண் ; ணி யர் ; ; ; || என் ; று ; என் . று ; || கா த லா . . . ள . . . . ||

; த நிச்நிநி ச்ரீ ; ச் நிதா || நிதமா ; நி த மா ; மாகா || ரீ ; க மபா காரீ சா ; ||
; கை . . . தொ . ழு ; தே . . || த்த , , ; , , , ; இருந் || த ; ஆ , , , , ராம் ; ||

### கடையடி

| | | |
|---|---|---|
| ; மா ; கா சா ; ; ; \|\| | ; சா ; ரி க மா ; ; ; \|\| | ; கா ; மாதா ; மா ; \|\| |
| ; விண் ; ணு யர் ; ; ; \|\| | ; மா ; ளி . கை ; ; ; \|\| | ; மா ; ட வீ ; தி ; \|\| |
| ; மா தா நீ தா ; த நி ச்ா \|\| | ச்ா ; ச்நிதாமா ; த நிச்ா \|\| | நித நிபா ; தாநிச்ா ; \|\| |
| ; வி ரை க மழ் ; சோ . . \|\| | லை ; சு . . லா ; வி . . \|\| | யெ ங் . ; கும் , , ; \|\| |

இவ்வடியைத் துணையடிபோற் பாடவும்

பண்ணியல் பாடலருந்த ஆலூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே.

---

குறிப்பு :—நட்டபாடைப் பண்ணைப் பழங் காலத் தமிழர்கள் நைவளம் என வழங்கினர். நைவள மென்பது நட்டபாடையெனப் பிங்கலந்தை நிகண்டிலும் கூறப்பட்டுளது. நூற்று மூன்று பண்களில் 37 ஆவது பண் நட்டபாடையாகும். பிற்காலத்தார் இதனை நாட்யபாஷா என வழங்கினர். சங்கீதரத்னாகரத்தை ஆராய்ந்த அருட்டிரு. விபுலானந்தர் இவ்வாறு கூறியுள்ளார், வேசரஷாடவத்தின் பாஷாங்கமாய் "நாட்யா" எனப் பெயர் பெற்று நின்ற இராகம், ஷட்ஜத்தைக் கிரஹ சுரமாகவும், மத்திமத்தை நியாச சுரமாகவும் பெற்றது. மேலும் இது மத்திமத்தை நிறையாகப் பெற்றுப் பஞ்சமத்தைத் தள்ளி விடுகிறதெனக் கூறப்பட்டிருத்தலின் இதனுருவம் ரி கி ம தி ந என்பதாகும். அங்ஙனமாதலின் இக் காலத்தார் இப் பண்ணுக் குரியதாக வழங்கும் நாட்டைக்குறிஞ்சி என்னும் இராகம் பொருத்தமானதே யாம்.

# தமிழ் நாட்டெல்லை.

---

நம் சங்கச் சார்பில் நடைபெற்ற கலைமகள் விழாவில், 30—9—49ல், நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியார், M.A., B. L., அவர்கள் சீரிய தலைமையில் குழுமிய பேரவையில் தமிழர், மாறுபட்ட கருத்து ஏதுமின்றி ஒருமித்துக்கீழ்க் காணும் முடிபுகளை நிறைவேற்றினார்கள்.

இம் முடிபுகளை எல்லாத் தமிழ்க் கழகங்களும் சங்கங் களும் தமிழ்ப் பெருமக்களும் நிறைவேற்றி ஆதரித்து ஆவன செய்வார்களென நம்புகிறோம்.

1. தமிழ் நாட்டில் தமிழே முதன்மொழியாக இருக்க வேண்டும்.

2. பழமையும், தனிமையும், தூய்மையும், சிறப்பும் வாய்ந்த தமிழ் மொழியே இந்தியப் பொது மொழியாக இருப்பதற்கு, வேறெந்த மொழியையும் விடப் பெரிதும் தகுதி வாய்ந்தது.

3. ஆட்சியாளர் முதலியோர் தாள் போக்கு வரத் தெல்லாம் தமிழிலேயே இருக்க வேண்டும்.

4. தமிழ் நாட்டெல்லை வடக்கே திருவேங்கட மலை யும், தெற்கே கன்னியா குமரியும், கிழக்கும் மேற்கும் கட லுமாக இருக்கவேண்டும்.

5. சென்னை மாநகரம் தமிழர தாகவும், தமிழ் நாட்டுத் தலைநகராகவும் இருக்க வேண்டும்.

6. சென்னை நகரை வேறெவருக்கும் பிரித்துக் கொடுக்கவோ தனி மாகாண மாக்கவோ யாருக்கும் உரிமை இல்லை; அங்ஙனம் பிரிக்கவோ தனி மாகாண மாக்கவோ கூடாது.

7. இம்முடிபுகளை ஆட்சியாளர் முதலிய எல்லோருக்கும் தெரிவித்து வற்புறுத்திக் கூறுகிறது.

8. இத் தமிழ் நாட்டி லுள்ள எல்லாத் தமிழ்க் கழகங்களும் சங்கங்களும் இந்த முடிபுகளை நிறைவேற்றி வைக்கவேண்டும்.

9. இந்த முடிபுகளை ஆட்சியாளருக்கும், புதினத்தாள்களுக்கும், தொடர்புள்ள ஏனையர்க்கும் அனுப்பிவைக்கும்படிக் கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சரை வேண்டிக் கொள்ளுகிறது.

முன்மொழிந்தார்:

இராவ் சாகிபு திரு. ஐ. குமாரசாமி **பிள்ளை அவர்கள், பி. ஏ.**

**வழி** மொழிந்தார்:

**திரு. கோ. தியாகராசப் பிள்ளை அவர்கள், ஜி. எம். வி. சி.**

## அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

---

# விளம்பரம்.

திருப்பனந்தாள் பரிசு நிதி வெளியீட்டின்கீழ்த் தமிழ்ப் புலமைக்காக அளிக்கப்படும் பரிசுகளுக்காக நடக்க விருக்கும் கீழ்க்கண்ட பரிசளிப்பிற்காக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் 1950ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 11 ஆம் தேதியில் ஒருபோட்டி நடைபெறும்.

1. கம்பர் நினைவுப் பரிசு.
2. சேக்கிழார் நினைவுப் பரிசு.
3. ஆதி குமரகுருபரர் நினைவுப் பரிசு.

மேலே குறித்த போட்டிகளுக்காகப் பல்கலைக்கழகத்தாரல் தமிழ்ச் செய்யுட்கள் தொகுத்து வெளியிடப்பட்டுள. அத் தொகுதிகளில் அடங்கிய செய்யுட்களில் விதிப்படி நன்கு பயின் றிருத்தல் வேண்டும்.

இந்தப் பல்கலைக் கழகத்திலோ, எந்தப் பல்கலைக் கழகத்திலோ தனித்தமிழ் எடுத்துக்கொண்டு வித்துவான் அல்லது புலவர் பிரிலிமினரியில் தேறியவர்களும், அல்லது பிற பல்கலைக் கழகத்தில் அதைப் போன்ற பரீட்சைகளில் தேறியவர்களும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பால பண்டித பரீட்சையில் தேறியவர்களும் மேற்கண்ட போட்டிகளிற் கலந்து கொள்ளத் தகுதியுள்ளவ ராவர்.

### வெளியீடுகளின் விலை விபரம்.

1. கம்பர் நினைவுப் பரிசுச் செய்யுட்டொகை ... 8 அணு
2. சேக்கிழார் நினைவுப் பரிசுச் செய்யுட்டொகை. 8 அணு
3. ஆதிகுமரகுருபரர் நினைவுப் பரிசுச் செய்யுட்டொகை ... 12 அணு

போட்டியில் கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் தேதியிலோ அதற்கு முன்போ தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

பரிசளிப்புத் திட்ட விவரங்களுக்கும் போட்டியைக் கருதி வெளியிடப்பட்ட செய்யுள் தொகைநூற் பிரதிகளைப் பற்றிய விவரங்களுக்கும் அண்ணுமலைநகர், அண்ணுமலைப் பல்கலைக் கழக ரெஜிஸ்திராருக்கு எழுதவும்.

அண்ணுமலைநகர்.
6—10—49.

S. Satchidanandam Pillai,
ரெஜிஸ்திரார்

## அரசவைப் புலவர்கள்

நம் சென்னை மாநிலத்தில் அரசவைப் புலவர்கள் ஏற்படுத்தியும், சிறந்த நூல்கள் எழுதுவார்க்குப் பரிசளிப்புத் திட்டம் வகுத்தும் நாட்டு மொழிகளுக்கு ஆக்கந் தருவதற்கு முன் வந்த தனிப் பெருமை, முன்னுள் கல்வி யமைச்சர் திரு. T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கட்கே உரித்தாகும்.

அவர்கள் ஏற்படுத்திய தேர்தற் குழுவினர் தெரிந்தெடுத்த அரசவைப் புலவர்கட்குச் சென்னை ஆட்சித் தலைவர் மாட்சிமிக்க பவநகர் மாவேந்தர் 1949, ஆகஸ்டு, 14 ஆம் நாள் சென்னை இராசாஜி மண்டபத்தில் பட்டயம் தந்து சிறப்புச் செய்தார்கள்.

இங்ஙனம் சிறப்புப் பெற்றவர்கள் :—

தமிழ்: நாமக்கல் திரு. வே. இராமலிங்கம் பிள்ளை அவர்கள், நாமக்கல், சேலம் மாவட்டம்.

தெலுங்கு: சதாவதானி திரு. செல்லப்பிள்ளை வேங்கட சாஸ்திரி அவர்கள், விசயவாடா.

மலையாளம்: மகாகவி திரு. வள்ளத்தோள் நாராயண மேனன் அவர்கள், மங்கலம், திரூர். தென்மலையாளம்.

கன்னடம்: திரு. M. கோவிந்த பாய் அவர்கள், மஞ்சேசுவார், தென் கன்னடம் மாவட்டம்.

வடமொழி: மகாமகோபாத்தியாய திரு. K. S. கிருட்டின மூர்த்தி சாஸ்திரி அவர்கள், மதுரை,

இவர்கட் கெல்லாம் சங்கத்தின் மகிழ்ச்சியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

நம் சங்கச் சார்பில் நம் கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர் வித்துவான் திரு. உ. பழநி முதலியார், B. O. L., அவர்கள் பேரவைக்குச் சென்று சிறப்பித்தார்கள்.